படைவேழம்

குறுவினா

1. பரணி இலக்கியம் எதனைப் பற்றியது?

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவது பரணி இலக்கியமாகும்.

2. செயங்கொண்டார் - குறிப்பு வரைக.

- முதல் குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவர்.
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் “பரணிக்கோர் செயங்கொண்டார்” என்று புகழ்ந்துள்ளார்.
- செயங்கொண்டார் “தீபங்குடி” என்னும் ஊரைச் சார்ந்தவர். கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் இவர்.

3.சோழப் படையின் யானைகள் எவ்வாறு பிளிறின?

சோழப் படையின் யானைகள் சினமுற்று இடியைப் போல பிளிறின. இதனைக் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாகக் கலிங்க வீரர்கள் அஞ்சினர். கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடும்போது தங்களுடைய நிழலையும் மற்றவர் நிழலையும் பார்த்து தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி ஓடினர்.

4. கலிங்கத்துப்பரணி - குறிப்பு வரைக.

- கலிங்கத்துப்பரணி 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று.
- பரணி இலக்கிய வகையைச் சார்ந்தது.
- தமிழில் பாடப்பட்ட முதல் பரணி நூல் இதுவே ஆகும்.
- கலிங்கத்துப் போர் வெற்றியை இந்நூல் பேசுகிறது.
- இந்நூலை இயற்றியவர் செயங்கொண்டார்.
- கலித்தாழிசையால் பாடப்பட்ட நூல் இது. 599 தாழிசைகள் கொண்டது.

5.சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படைவீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

- கலிங்க வீரர்கள் இது என்ன மாய வித்தையா” என வியந்தனர். தம்மை அழிக்க வந்த தீயோ? உயிரைப் பறிக்க வந்த எமனோ? என்று அஞ்சினர்.
- படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். கடலில் தாவிக் குதித்துத் தப்பினர்.
- யானைகள் பின்னே மறைந்து கொண்டனர். எந்தத் திசையில் செல்வது எனத் தெரியாமல், மலைக் குகை மற்றும் புதர்களில் ஓடி

ஒளிந்தனர். ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தன்னுடைய நிழலைக் கூட எதிரிகள் துரத்தி வருவதாக எண்ணிப் பயந்தனர்.

- யானை பிளிறியதைக்கேட்டு பயந்த வீரர்கள் குகைக்குள் சென்று மறைந்தனர். புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.